முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 25.08.2025

E.A.No. 1/2019 in E.P.No. 40/2017

ம.சா.1-ஜெயபால்

1ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் மீன் வியாபாரம் செய்து வருகிறேன். நான் சர்ச்சில் எத்தனை வருடங்களாக மெம்பராக இருக்கிறேன் என்றால் நான் பிறந்ததில் இருந்தே மெம்பர். நான் 1960 ல் பிறந்தேன். நான் 21ம் வயது முதல் சர்ச்க்கு திருவிழா வரி செலுத்திவருகிறேன். எனக்கு சர்ச்சை பற்றியும் அதன் சுற்றிவட்டாரப்பகுதியையும் தெரியும் என்றால் சரியல்ல. சர்ச்சைக்கு மேற்கு பக்கம் உள்ள பகுதியை எனக்கு தெரியும். சுற்றியுள்ள பகுதியை எனக்கு தெரியாது.

2) சவரிமுத்து மகன் அல்போன்சு எத்தனை வருடங்களாக உறுப்பினராக இருக்கிறார் என்றால் தெரியாது. நான் பிறப்பதற்கு முன்பு இருந்தே அவர் உறுப்பினராக இருக்கிறார். நான் சர்ச்சில் 20 வயதிலிருந்தே பொறுப்பில் இருந்து வருகிறேன். சர்ச் உறுப்பினராக இருந்து பணம் செலுத்தும் நபர் மட்டுமே பொறுப்பில் இருக்க முடியும் என்றால் சரி. எத்தனை முறை நான் சர்ச்சில் பொறுப்பில் இருந்திருக்கிறேன் என்றால் 3 முறை. எந்தெந்த காலக்கட்டத்தில் எந்தெந்த பொறுப்பில் இருந்தேன் என்றால், 1997 ல் இருந்து 1999 வரையிலும், 2002-2007 வரையிலும், 2021 முதல் - தற்போது வரை தலைவராக பொறுப்பில் இருந்து வருகிறேன். மனுதாரர் என்னென்ன பொறுப்பில் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது.

3) நான் பொறுப்பில் இருந்த காலக்கட்டத்தில் அல்போன்சு பொறுப்பில் இல்லை என்றால் சரி. ஆலைய நிர்வாகி என்ற முறையில் அல்போன்சு மனுவை தாக்கல் செய்திருந்தால் தவறு என்றால் சரியல்ல. மனுவின்அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் இடத்தை அளவீடு செய்யும் போது நான் உடன் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட்டபோதும் அசல் வழக்கிலும் மனு சொத்தின் விபரங்களை நான் தெரிவித்தேனா என்றால் இல்லை.

4) அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் தவறான அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளதாக மனுவில் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது அல்போன்சு சொல்லியுள்ளார். இன்றைய தினம் நான் ஆலயத்தின் தலைவர் என்ற முறையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. மனுவின் சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. ஆலயத்தின் தலைவர் என்ற முறையில் மனுவின் சங்கதிகள் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக அதை தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இறுதி தீர்பாணை உத்தரவை எதிர்த்தோ அல்லது வழக்கு தீர்பாணையை எதிர்த்தோ மேல்முறையீடு தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் எனக்கு முன்னால் இருந்தவர் தாக்கல் செய்திருக்கிறார். நான் தற்போது தலைவர் என்பதால் மேற்படி மேல்முறையீட்டு வழக்கின் ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் இயலாது. அது என் கைவசம் இல்லை.

5) அசல் வழக்கை பற்றி எந்த முன் விபரங்கள் தெரியாமல் தலைவராக பொறுப்பேற்கும் ஒவ்வொரு நபரும் தனிதனியாக மனுதாக்கல் செய்து வருகிறோம் என்றால் எனக்கு தெரியாது. தலைவர் என்ற முறையில் சர்ச்சுக்கோ எனது தனிப்பட்ட வாழ்க்கையிலோ சொத்துரிமை மாற்ற ஆவணங்கள் எழுதிக்கொடுத்துள்ளேன் அல்லது எழுதிவாங்கியுள்ளோம் என்றால் கோவிலுக்காக 3 சொத்துகள் வாங்கியுள்ளேன். தனிப்பட்ட முறையில் 2 விலைப்பத்திரம் என் பெயரில் பதிந்துள்ளேன். ஒரு சொத்தை எனது மகளுக்கு கொடுத்துள்ளேன்.

6) அதனால் சொத்துகள் சொத்துகள் வாங்கும்போதும் விற்கும்போது பின்பற்றப்படும் நடைமுறைகள் எனக்கு தெரியும் என்றால் ஓரளவிற்கு தெரியும். சாதாரணமாக ஒரு சொத்து வாங்கும் போது என்னென்ன விபரங்களை சரிபாக்கவேண்டும் என்றால், வில்லங்கசான்றிதழ் எடுத்து பார்க்க வேண்டும். பத்திர எழுத்தர் சொல்லும் ஆவணங்களை எடுத்துக்கொண்டு வரவேண்டும்.

7) சொத்தை வாங்கும் போது அதன் முன் பத்திரங்களை பார்க்க வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். மனு சொத்தை வாங்கும்போது அதன் முன்பத்திரத்தை வாங்கி சரிபார்த்தீர்களா என்றால் பார்த்தேன். முன் சொத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரமும் மனு சொத்தை விலைக்கு வாங்கிய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரமும் ஒன்றாக உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. முன் பத்திரத்தை இந்த மனுவில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு விலைக்கு கொடுத்தவர் எங்களிடம் கொடுக்கவில்லை. சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது.

8) இல்லாத சொத்திற்கு விலைப்பத்திரம் ஏற்படுத்தியதால் அதன் முன் ஆவணங்களை இந்த வழக்கில்தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.